www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

# Thiruvarur

## முதல் இடைப்பருவத் தேர்வு - 2024

### ஒன்பதாம் வகுப்பு

நேரம்: 1.30 மணி அறிவியல் மதிப்பெண்கள்: 50

**I.** சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக. **10×1=10**

1) ஒரு மெட்ரிக் டன் என்பது
அ) 100 குவின்டால் ஆ) 10 குவின்டால்
இ) 1/10 குவின்டால் ஈ) 1/100 குவின்டால்

2) கீழ்க்கண்டவற்றுள் எது நிறையை அளவிடும் கருவியல்ல?
அ) சுருள்தராசு ஆ) பொதுத் தராசு இ) இயற்பியல் தராசு ஈ) எண்ணியல் தராசு

3) மையவிலக்கு விசை ஒரு
அ) உண்மையான விசை ஆ) மையநோக்கு விசைக்கு எதிரான விசை
இ) மெய்நிகர் விசை ஈ) வட்டப்பாதையின் மையத்தை நோக்கி இயங்கும் விசை

4) ஒரு துளி மையினை நாம் நீரில் கலக்கும் போது நமக்கு கிடைப்பது
அ) பலபடித்தான் கலவை ஆ) சேர்மம்
இ) ஒரு படித்தான கலவை ஈ) தொங்கல்

5) நியூட்ரான் எண்ணிக்கையின் மாற்றம் அந்த அணுவை இவ்வாறு மாற்றுகிறது?
அ) ஒரு அயனி ஆ) ஒரு ஐசோடோப் இ) ஒரு ஐசோபார் ஈ) வேறு தனிமம்

6) நான்கு அறைகளையுடைய இதயம் கொண்ட விலங்கு
அ) பல்லி ஆ) பாம்பு இ) முதலை ஈ) ஓணான்

7) காற்றுறைகள் மற்றும் காற்றெலும்புகள் காணப்படுவது எதில்?
அ) மீன் ஆ) தவளை இ) பறவை ஈ) வௌவால்

8) குளிர் இரத்தப் பிராணிகள் எவை?
அ) மீன், தவளை, பல்லி, மனிதன் ஆ) மீன், தவளை, பல்லி, மாடு
இ) மீன், தவளை, பல்லி, பாம்பு ஈ) மீன், தவளை, பல்லி, காகம்

9) நார்கள் கொண்டுள்ளது
அ) பாரன்கைமா ஆ) ஸ்கிளிரன்கைமா இ) கோலன்கைமா ஈ) ஏதும் இல்லை

10) மிருதுவான தசை காணப்படுவது
அ) கர்ப்பப்பை ஆ) தமினி இ) சிரை ஈ) இவை அனைத்தும்

**II.** மிகச்சுருக்கமான விடையளி. (ஏதேனும் ஏழு மட்டும்)
(கேள்வி எண். 20 கட்டாய வினா) **7×2=14**

11) மீச்சிற்றளவு - வரையறு.

12) வேகம் ஒரு ______ அளவு அதே சமயம் திசைவேகம் ஒரு ______ அளவு

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



13) பொருத்துக.

1. ஸ்கிளிரைடுகள் - குளோரன்கைமா
2. பசுங்கணிகம் - ஸ்கிளிரன்கைமா
3. எளிய திசு - ஃபுளோயம்
4. துணை செல் - கோலன்கைமா

14) K மற்றும் Cl ஆகியவற்றின் எலக்ட்ரான் பகிர்வை எழுதுக.

15) கீழ்க்கண்ட கலவைகளை எவ்வாறு பிரிக்கலாம்?

i) ஒன்றாகக் கலக்கும் திரவங்கள் ii) ஒன்றுடன் ஒன்று கலவாத திரவங்கள்

16) நிமட்டோசிஸ்ட்கள் பற்றி எழுதுக.

17) சரியா/தவறா தவறெனில் திருத்தி எழுதுக.

i) தலைப்பிரட்டை இருவாழ்விகளின் லார்வா ஆகும்.

ii) கால்வாய் மண்டலம் குழியுடலிகளில் காணப்படுகிறது.

18) பதங்கமாதல் வரையறு?

19) கூட்டுதிசு என்றால் என்ன?

20) ஒரு பந்தய மகிழுந்து 4மீ/விநாடி$^2$ என்ற சீரான முடுக்கத்தில் பயணிக்கிறது. புறப்பட்ட 10 விநாடியில் அது கடந்த தூரம் என்ன?

**III. சுருக்கமான விடையளி:- (எவையேனும் மூன்று) 3×4=12**

21) உருளைப்புழுக்கள், தட்டைப்புழுக்கள் வேறுபடுத்து. (எவையேனும் 4)

22) SI அலகுகளை எழுதும்போது கவனிக்க வேண்டிய விதிமுறைகள் நான்கினை எழுதுக?

23) அ) பிரௌனியம் இயக்கம் என்பது என்ன?

ஆ) டிண்டால் விளைவு - குறிப்பு எழுதுக.

24) மைட்டாசிஸின் எந்த நிலையில் குரோமோசோம்கள் செல்லின் மையப்பகுதியில் அமைகின்றன? எப்படி?

**IV. விரிவான விடையளி:- (எவையேனும் இரண்டு) 2×7=14**

25) உள்ளீடற்ற தேநீர்க் குவளையின் தடிமனை எவ்வாறு கண்டறிவாய்?

26) அ) ஆக்சிஜன் மற்றும் சல்பர் அணு அமைப்பை படம் வரைந்து எலக்ட்ரான் கட்டமைப்பை எழுதுக.

ஆ) பொருத்துக.

1. டால்டன் - பிளம் புட்டிங் மாதிரி
2. சாட்விக் - நியூக்கிளியஸ் கண்டுபிடிப்பு
3. ரூதர்போர்ட் - முதல் அணுக்கொள்கை
4. J. தாம்சன் - நியூட்ரான் கண்டுபிடிப்பு

27) தொகுதி கணுக்காலிகள் பற்றி விவரிக்க.

28) மைட்டாஸிஸ் மற்றும் மியாசிஸ்க்கு இடையேயுள்ள வேறுபாட்டினைப் பட்டியலிடுக.

********

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com